# திணை நோக்கில் வந்தாரங்குடி நாவல்

***க. பாரதி***
முனைவர் பட்ட ஆய்வாளர் (முழுநேரம்), தமிழ் உயராய்வுத்துறை
அரசு கலைக் கல்லூரி (தன்னாட்சி), கோயம்புத்தூர்

***முனைவர் மொ. இரவிக்குமார்***
உதவிப் பேராசிரியர், தமிழ் உயராய்வுத்துறை
அரசு கலைக் கல்லூரி (தன்னாட்சி), கோயம்புத்தூர்
https://doi.org/10.5281/zenodo.14383238

***ஆய்வுச் சுருக்கம்***
*மனிதன் தன் சமூகவாழ்வை நிலைநிறுத்திக்கொள்ள தனக்குத்தானே சில நெறிமுறைகளையும் பண்பாட்டுபின்புலங்களையும்உருவாக்கிக்கொண்டுவாழ்கிறான்.அவற்றுள்சிலநம்பிக்கைகளையும் பழக்கவழக்கங்களையும்தனது அனுபவங்களினூடே கற்றுவாழ்வியலோடுபிணைத்துக்கொள்கிறான். அவனது வாழ்வியல் என்பது சடங்குகள், கலை, நம்பிக்கைகள், பண்பாடு, இசை, மரபுசார் அறிவு ஆகியவற்றை உள்ளடக்கியதாக அமையும். மனிதன் தான் வாழும் நிலப்பரப்பிற்கு ஏற்ப தன் வாழ்க்கை முறைகளை வகைப்படுத்தி வாழ்ந்துள்ளான் என்பதை தமிழின் முதன்மை இலக்கண நூலான தொல்காப்பியம் விளக்குகிறது. நிலங்களை குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என ஐவகையாகப் பகுத்து அந்நிலமக்கள் செய்யும் தொழில்களின் அடிப்படையில் குறவர், ஆயர், உழவன், சேர்ப்பன், மறவர் என்னும் பொதுப்பெயரால் அழைக்கப்பட்டனர். வயலும் வயல் சார்ந்த இடமான மருதத் திணையின் மக்கள் மண் சார்ந்த மரபுகளை இன்றளவும் பின்பற்றி வருகின்றனர். கண்மணி குணசேகரன் எழுதிய வந்தாரங்குடி நாவல் நடுநாட்டு மக்களின் மருத நிலம் சார்ந்த வாழ்வியலை வெளிப்படுத்துகிறது. அதனடிப்படையில் வந்தாரங்குடி நாவல் வெளிப்படுத்தும் நடுநாட்டு மக்களின் மருத நிலம் சார்ந்த நிலவியல் பண்பாடுகளை தொல்காப்பியத்தின் வழி ஆராய்வதாக இக்கட்டுரை அமைகிறது.*
***திறவுச் சொற்கள்:*** *வந்தாரங்குடி, நடுநாடு, முதற்பொருள், கருப்பொருள், உரிப்பொருள், மருதநிலம்.*

**முன்னுரை**

*சமூகம் தனது நாகரிக மாற்றத்தால் பல வளர்நிலைகளை அடைந்து புதிய பரிணாமத்திற்குள் புகும் போது தனக்கான மாற்றங்களையும் உள்ளடக்கியே நகர்கிறது. ஒரு குறிப்பிட்ட சூழல் அல்லது நிலப்பரப்பில் வாழும் மக்களும் அத்தகவமைப்பினை விரும்பி அல்லது கட்டாயத்தின் பேரில் ஏற்றுக் கொண்டு வாழ்கின்றனர். மக்களின் புறக்கட்டமைப்புகள் மாற்றத்திற்குட்பட்டாலும் வாழ்வியல் முறைகளும் நிலம் சார்ந்த பண்பாடுகளும் ஆங்காங்கே துளிர்விடுவதைக் காண முடிகின்றது. ஒவ்வொரு நிலம் சார்ந்த மக்களுக்குள்ளும் அந்தந்த நிலம் சார்ந்த பழக்கவழக்கங்கள் நாகரிக மாற்றத்திலும் இலைமறைக் காயாக வெளிப்படும் என்பதில் ஐயமில்லை. தென்னார்க்காடு மாவட்டத்தில் உள்ள கள்ளக்குறிச்சி, திருக்கோவலூர், கடலூர், விருத்தாச்சலம் உள்ளிட்ட ஊர்களை உள்ளடக்கியப் பகுதியை நடுநாடு என்று வழங்குவர். கண்மணி குணசேகரன் எழுதிய வந்தாரங்குடி நாவல் வழிப் புலப்படும் மருத நிலம் சார்ந்த நிலவியல் பண்பாட்டுப் பதிவுகளை இக்கட்டுரையின் வாயிலாக அறியமுடிகிறது.*

**வந்தாரங்குடி நாவல்**

*வந்தாரங்குடி என்னும் நாவலின் ஆசிரியரான கண்மணி குணசேகரன் வந்தாரங்குடி எனும் சொல், சொந்த ஊர் விட்டு வெளியேறி வேறு ஊர்களில் பிழைப்பிற்காகத் தஞ்சம் புகுதல் என்னும் பொருளில் வழங்கப்படுகிறது என விளக்கமளிக்கிறார். வேப்பங்குறிச்சி எனும் கிராமத்தையும் அதன் சுற்றியுள்ள கிராமங்களையும் நெய்வேலி சுரங்கப் பணிக்காக அரசாங்கம் எடுத்துக்'கொள்ளும் கதைக்கருவை மையமிட்டு நகர்கிறது கதையமைப்பு. ராசயோக்கியம், செங்கல்ராவு குடும்பங்களுக்கிடையேயான பகைமை, சிவமணி - புமாவின் காதல், வயல்களில் (கொல்லைகளில்) விதைப்பு செய்துள்ள பயிர்கள், அருகாமைத் தோட்டத்துக்காரருடனான சண்டைகள், உறவுகளுக்குள்ளான பாசப் பிணைப்புகள், மனக்கசப்புகள், அரசாங்கத்திற்கெதிரான போராட்டங்கள் என அனைத்து சூழலையும் இந்நாவல் புனைந்துள்ளது. கடலூர், விருத்தாச்சலம் போன்ற ஊர் சார்ந்த வட்டாரவழக்கு சொல்லாடல்கள் இந்நாவல் முழுவதும் காணமுடிகிறது.*

**நடுநாடு**

*சங்க காலத்தில் திருக்கோவலூரை தலைநகராகக் கொண்டு மலையமான் என்னும் மரபைச் சார்ந்த மன்னர்கள் ஆட்சி செய்ததால் மலையமானாடு என்னும் பெயர் தென்னார்க்காடு மாவட்டப்பகுதிக்கு வழங்கப்பெற்றது. மலையமானாடு என்னும் பெயர் பின்னர் சுருங்கி மலாடு என மருவியது. அதையடுத்து இப்பகுதிக்கு நடுநாடு, திருமுனைப்பாடி நாடு, சேதி நாடு, மகத நாடு, சகந்நாத நாடு, சன நாத நாடு என்னும் பெயர்களும் வழங்கலாயிற்று. தொண்டை நாட்டிற்கும் சோழ நாட்டிற்கும் நடுவே உள்ள பகுதியாதலினாலும் மூவேந்தர்களுக்கும் நடுநிலைமையோடு வாழ்ந்த மரபினர் மலையமான் ஆதலினாலும் நடுநாடு என்னும் காரணப் பெயர் பெற்றது.*

***"துஞ்சா முழவின் கோவற் கோமான்
நெடுந் தேர்க் காரி....."*** ***(அகம் - 35)***

*இப்பாடலில் கோவற் என்னும் சொல் திருக்கோவலூரைக் குறிக்கின்றது. அது போலவே திருக்கோவலூரை புறநானூற்றில் 99-ஆம் பாடலும் குறிப்பிடுகிறது. முள்ளூர் என்னும் ஊர் பற்றிய செய்திகள் நற்றிணையில் 170, 291 பாடல்களிலும் குறுந்தொகையில் 312, அகநானூற்றில் 209, புறநானூற்றில் 123, 126, 174 ஆகிய பாடல்களிலும் அறியப் படுகிறது.*

*காவிரி நதி பாயும் நிலப்பகுதியை காவிரி நாடு, புனல் நாடு என்று அழைப்பது மரபு. அதுபோல கெடில நதி பாயும் பகுதியைக் கெடிலநாடு என்று அழைப்பர் இப்பகுதியை ஆறாம் நூற்றாண்டில் வாழ்ந்த திருநாவுக்கரசர் தம் பதிகங்களில் குறிப்பிட்டுள்ளார்.*

***"அவர் தமது தேவாரத்தில் பன்னிரண்டாம் திருவதிகைப் பதிகத்தில் இரண்டிடங்களில் "கெடிலநாடர்" எனவும் பதினைந்தாம் திருவதிகைப் பதிகத்தில் ஏழிடங்களிலும் "கெடில நாடன்" எனவும் இறைவனைக் குறிப்பிட்டுள்ளார்."***

***(கெடிலக்கரை நாகரிகம் ப.எ.111)***

*இக்கெடில நாடானது தென்னார்க்காடு மாவட்டத்தையும் அதன் நடுவேயுள்ள கள்ளக் குறிச்சி, திருக்கோவலூர், கடலூர் ஆகிய மூன்று ஊர்களையும் உள்ளடக்கியது.*

*கெடிலக்கரை நாகரிகம் கொண்டது நடுநாடு. ஆற்றங்கரையோரம் அமைந்த மருத நிலப்பகுதி என்பதால் வேளாண்மையில் சிறந்து விளங்கியது. தொன்மையான இலக்கியச் சிறப்பைக் கொண்ட இந்நடுநாடு பக்தி இலக்கியங்களில் பதிவு செய்யப்பட்டுள்ளது.*

***"கெடிலக்கரையில் பாடல் பெற்ற பழம் பெரும்பதிகள் பல உள்ளன. மற்றும் திருகோவலூர், கிளியுர், ஆற்றூர், சேந்தமங்கலம், திருநாவலூர், திருவதிகை, திருமாணிகுழி, கடலூர் முதலிய ஊர்கள் பல்வேறு காலங்களில் பல்வேறு அரச மரபினர்கட்குத் தலைநகரங்களாயிருந்தமை குறிப்பிடத்தக்கது."***

***(புலவர். சண்முக சுந்தரனார். 2001, ப.எ. 241)***

*அத்தகைய சிறப்பு பெற்ற நடுநாட்டில் உணவிற்கு நெல் விளைவிப்பது மட்டுமன்றி*

கரும்பும், நிலைக்கடலையும் விளைவிக்கப் பட்டுள்ளது. நிலவளத்தைப் போலவே நீர் வளம் மிக்க பகுதியாக நடுநாடு விளங்கியது. மழையற்ற பொழுதுகளிலும் நீர் வற்றாத ஊற்று வளம் மிக்க பகுதியாக விளங்குகிறது. கனிமவளம் நிறைந்தது தென்னார்க்காடு மாவட்டம்.

**"நெய்வேலியில் பழுப்பு நிலக்கரி தோண்டி எடுக்கப்படுவது போலவே மற்ற வளங்களும் தோண்டி எடுக்கப்பட வேண்டிய நிலையில் உள்ளன."**

**(புலவர். சண்முக சுந்தரனார். 2001, ப.எ. 242)**

வேளாண்மையை முக்கியத் தொழிலாகக் கொண்டு மக்கள் வாழ்ந்த பின்புலத்தை மேற்கண்ட செய்திகள் புலப்படுத்துகின்றன. மக்களும் நிலம் சார்ந்த அறிவு, பழக்க வழக்கம் ஆகியவற்றில் மேம்பட்டிருந்தனர் என்பதையும் அறியமுடிகிறது.

## நிலவியல் பண்பாடு

பண்பாடு என்பது நமது இயற்கையான பண்புகளுடன் வாழும் வாழ்க்கை மற்றும் நமது சிந்தனைகளின் வெளிப்பாடாகும். பண்பாடு இடத்திற்கு இடம் நாட்டுக்கு நாடு வேறுபடுகிறது.

**"பெரும்பாலும் சிறந்த வாழ்க்கைக்கு அடிப்படையாக அமைகின்ற உள்ளப் பாங்கின் வெளிப்பாட்டையே பண்பாடு என்கிறோம். அந்த வெளிப்பாடு சுவையுணர்வாகவும், நடையுடை பாவனைகளாகவும் தோன்றும். அப்பண்பாடில்லாதவனைக் காட்டுமிராண்டி என்கிறோம். வாழ்வின்பலபல போக்குகள்அமைந்த பலவேறு நிலைகளையும் இந்தப் பண்பாடென்பது குறிக்கும். உடலைப் பற்றிய நன்னிலை, மனத்தைப் பற்றிய தூய்மை நிலை, பேச்சின் இனிமை இவையெல்லாம் பண்பாட்டில் அடங்கும்" (தெ. பொ. மீனாட்சி சுந்தரனார்., 1980 ப.எ.10)**

என தெ. பொ. மீனாட்சி சுந்தரனார் பண்பாட்டிற்கு விளக்கமளிக்கிறார்.

மனிதன் தொடர்ந்து ஒரு குறிப்பிட்ட நிலவெளியில் வாழும் போது அந்த வெளி சார்ந்த பழக்கங்கள் நடைமுறைகளும் உருவாகின்றன. அவையே தொடர்ந்து பின்னற்றப்படும் போது பண்பாட்டுக் கூறுகளாக உருக்கொள்கின்றன.

## ஐவகை நிலம்

தமிழ் நிலமானது நான்கு வகைகளாகப் பகுக்கப்பட்டுள்ளது. நிலத்தின்தகவமைப்பிற்கேற்ப இப்பகுப்புமுறை அமைகிறது.

**"மாயோன் மேய காடுறை உலகமும்**
**சேயோன் மேய மைவரை உலகமும்**
**வேந்தன் மேய தீம்புனல் உலகமும்**
**வருணன் மேய பெருமணல் உலகமும்**
**முல்லை, குறிஞ்சி, மருதம், நெய்தல் எனச்**
**சொல்லிய முறையால் சொல்லவும் படுமே"**

**(தொல்.பொருள்.அகம் - 5)**

என்ற தொல்காப்பிய நூற்பாவிற்கேற்ப காடு சார்ந்தப் பகுதி முல்லை, மலைப் பகுதியை குறிஞ்சி, வயல்வெளிப் பகுதியை மருதம், கடல் சார் பகுதியை நெய்தல் என வகைப்படுத்தி வாழ்வை நெறிப்படுத்தி வாழ்ந்தனர்.

முல்லை முதலான பெயர்கள் அனைத்தும் அவ்வந் நிலத்தில் சிறந்த புவாகிய கருப்பொருள்களால் பெற்ற பெயர் என்று இளம்புரணர் கூறுகின்றார். இக்கருத்தினை சங்க இலக்கியப் பாடல்களைக் கொண்டு விளக்குகிறார்.

**"நெல்லொடு**
**நாழி கொண்ட நறுவீ முல்லை**
**அரும்பவிழ் அலரி தூஉய்"**

**(முல்லைப்பாட்டு - 8 -10)**

**"கருங்கோற் குறிஞ்சிப் புக்கொண்டு**
**பெருந்தேன் இழைக்கும் நாடனொடு நட்பே"**

**(குறு - 3)**

ஆகவே குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், ஆகிய திணைகள் கருப்பொருளான புவால் பெயர் பெற்றுள்ளன.

ஆனால் பாலைத் திணை வறட்சியை தாங்கக்கூடிய பாலை மரத்தின் பெயரால் வழங்கப்படுகிறது. பாலைத் திணையினை தொல்காப்பியர்,

**"அவற்றுள் நடுவண் ஐந்திணை நடுவனது ஒழியப்**
**படுதிரை வையம் பாத்திய பண்பே"**

**(தொல்.பொருள்.அகம் - 2)**

எனும் நூற்பாவில் நடுவண் ஐந்திணை என்று குறிப்பிட்டுள்ளார். பாலையானது பிற திணைகளைப் போன்று நிலைத்தத் தன்மை கொண்டதல்ல. குறிஞ்சியும் முல்லையும் வறண்ட

*நிலையில் பாலையாக உருக்கொள்ளும் என்பது சிலப்பதிகார அடிகள் மூலம் அறியலாம்.*

**மருதத் திணைக்குரிய பொருள்கள்**

*முதல், கரு, உரிப்பொருள் என்பவை ஒரு திணைக்குரிய பொருள்களாகக் கொள்ளப் படுகின்றன. நிலமும் பொழுதும் முதற்பொருள் எனப்படுகின்றன. மருத நிலத்தின் முதற் பொழுதுள் நிலமானது வயலும் வயல் சார்ந்த இடமும் ஆகும்.*

*வந்தாரங்குடி நாவல் முழுவதும் வேளாண் நிலத்தை மையமிட்ட கதைக் களமாகக் காணப்படுகிறது. வேளாண்நிலம் என்பதால் உழவு செய்கின்ற நிலத்தை தெய்வமென வணங்குகின்றனர். பொங்கல் பண்டிகை என்பது வளமைச் சடங்கின் குறியீடாகும். அப்பண்டிகைக்கு நிலத்தையும், அந்த உழவிற்கு துணைபுரியும் கருவிகளையும் வணங்கும் பண்பை ஆசிரியர் சுட்டிக் காட்டுகிறார். "கையிலிருந்த மா, வேம்புக் கொத்துகளோடு, படையல் இலைப் பருக்கையை எடுத்து விளக்கிற்கு இட்டது போல், எட்டி மறிச்சியிலிருந்த ஆவாரஞ் செடியின் பூங்கொத்து ஒன்றையும் ஒடித்துச் சேர்த்து முலையில் போட்டு சத்தமாக கத்தினாள் "பொங்கலோ பொங்கல்...." சொல்லுகையில் புமாவிற்கு உடம்பெல்லாம் ஒரு உற்சாகம்." (கண்மணி குணசேகரன், 2016, ப.எ.155)*

*அத்தகைய வளம் மிக்க நிலத்தை அரசாங்கம் உடைமையாக்க முற்படுகிறது. இதனை ஏற்க மனமில்லாமல்*

> ***"ஒண்ணுமில்ல. அங்கியே இரு.... புச்சி, அதுகிட்ட போயிநில்லு. அதுகாதுல இந்த சேதிவுழுந்ததுன்னா இழுப்பு இழுப்பு வந்து தொலைச்சிடும்."***
>
> ***(கண்மணி குணசேகரன், 2016, ப.எ.183)***

*என்று பாஞ்சாலையின் உடல்நலத்தைப் பற்றி பேசுகிறார்.*

*முதல்பொருளுள் முதன்மையானது நிலம், வந்தாரங்குடி நாவலின் மையமாக அமைகிறது. மக்களின் வாழ்'வாதாரமாக விளங்கும் நிலம் அவர்களின் வாழ்வியல் மாற்றத்திற்கும் வழிகோலியது.*

**மருதத் திணைப் பொழுதுகள்**

*மருத நிலத்தின் சிறுபொழுதுகளாக வைகறையும் விடியலும், பெரும் பொழுதுகளாகக் கார், கூதிர், முன்பனி, பின்பனி, இளவேனில், முதுவேனில் ஆகிய ஆறும் குறிக்கப்படுகின்றன.*

> ***"வைகறை விடியல் மருதம்"***
>
> ***(தொல்.பொருள்.அகம் - 9)***

**சிறுபொழுது**

*வயல்வெளிகளில் பணி செய்வதென்பது பெரும்பாலும் அதிகாலைப் பொழுதிலிருந்தே தொடங்கிவிடும்.*

> ***"கிழக்கு வெளுத்து நிலம் தெளிந்து கொண்டிருந்தது. ஈன்ற பூங்குட்டியின் மேல் படிந்து கிடக்கும் நச்சுப்படிவைப் போல் மீத இருள். நக்கிச் சுத்தம் செய்ய விரையும் ஒரு குட்டித்தா ஆட்டின் அவசரத்தோடு கீழ்வானம் சிவந்து கொண்டிருந்த நேரம்..... விழித்துக் கொண்டு விட்டன பறவைகள். சேவல்களின் கூவல்கள், காக்கைகளின் கரைதல்கள், குருவிகளின் சிலும்பல்கள், கொட்டாப் புளிகளின் கெக்களிப்புகள்.... இணைகளோடு குஞ்சு களோடும் கூடுகள்தோறும் விடியல் ஒலிகள்"***
>
> ***(கண்மணி குணசேகரன், 2016, ப.எ.15)***
>
> ***"கிணற்றுமேட்டு மாமரமும் ஒட்டிய நாலைந்து தென்னைகளும், மள்ளாட்டைக் கொல்லைக்கு அங்காண்ட மறிச்சியில் நிற்கும் வேம்பு, நுணா, பொறிச்சி மரங்களும் அவைகளில் வந்தமரும் குருவிகளும் வைப்பது தான், அவளுக்கு இந்த அதிகாலை வில்லங்க வேலை"***
>
> ***(கண்மணி குணசேகரன், 2016, ப.எ.16)***

*கம்பு திணைகளில் வந்தமரும் குருவிகளை விரட்டுவது, கால்நடைகளுக்கு புல் அறுத்து தீனி போடுவது போன்ற பணிகள் விடியல் பொழுதிற்கான பணிகளாக அடையாளப் படுத்தப்பட்டுள்ளன.*

**கருப்பொருள்கள்**

*நிலத்தையும் காலத்தையும் அடிப்படையாகக் கொண்டு பிறப்பவைக் கருப்பொருள்கள்.*

> ***"தெய்வம் உணாவே மாமரம் புள் பறை***
> ***செய்தி யாழின் பகுதியொடு தொகைஇ***
> ***அவ்வகை பிறவும் கருஎன மொழிப."***
>
> ***(தொல்.பொருள்.அகம் - 20)***

*தெய்வம், உணவு, விலங்கு, மரம், பறவை, பறை, தொழில், யாழ் போன்றவற்றைக் கருப்பொருள்களாக தொல்காப்பியர் சுட்டுகிறார். இளம்பூரணார் பூ, நீர் என்பவற்றையும் சேர்த்து பத்து கருப்பொருள்களைக் குறிப்பிடுகிறார்.*

**தெய்வம்**

*மருத நிலத் தெய்வமாக வேந்தன் குறிக்கப்பெறும் நிலையில் வந்தாரங்குடி முழுவதும் அவர்களது காவல் தெய்வம் அல்லது விருப்பமான தெய்வங்களை வணங்குவதைக் குறிப்பிட்டுள்ளார்.*

***“கள்ளும் கண்ணியும் கையுறை யாக***
***நிலைக்கோட்டு வெள்ளை நாள் செவிக் கிடாஅய்***
***நிலைத்துறைக் கடவுட்கு உளப்பட ஓச்சித்***
***தணிமருங்கு அறியான் யாய்அழ***
***மணிமருள்மேனி பொன்னிறம் கொளலே”***

***(அகம் - 156)***

*மருதநிலக்கடவுள் வேந்தன் எனக் குறிப்பிடப்படும் நிலையிலும் சிறுதெய்வ வழிபாடும் மருதநிலத்திற்குரிய ஒரு வழிபாட்டு தெய்வமாக இருந்துள்ளதை அகநானூற்று பாடல் அடிகளால் அறியலாம்.*

***“நாட்டுப்புறங்களில் வாழும் உழைக்கும் மக்களின் வழிபடு தெய்வம் காளி, கருப்பன், முனியன், மாடன் போன்ற சிறு தெய்வங்களே ஆரியமயமாக்கப்பட்ட மேட்டுக்குடியினரின் பெருந்தெய்வ வழிபாட்டு முறைக்கும், இச்சிறு தெய்வ வழிபாட்டு முறைக்கும் பண்பாட்டளவில் பெரிய வேறுபாடு உண்டு.”***

***(பாலுச்சாமி.எ., 2011, ப.எ.24)***

***“தீப ஆராதனைக் காட்டிவிட்டு தட்டை எடுத்துப்போன கரியர், கீழே வைக்காமல் வெகு நேரமாய் அய்யனாரையே பாாத்துக்கொண்டு நின்றார். வீரசிங்கன் குப்பத்து வேலாயுதத்தின் பம்பை கணதாண்டி விண் விண் என்று அடி தெறித்துக் கொண்டிருந்தது. திடுமென கரியருக்குள் ஒரு மின்னல் பாய்ச்சல். நா அய்யனாரு வந்திருக்கேன்டா.”***

***(கண்மணி குணசேகரன், 2016, ப.எ. 689)***

*என்ற அய்யனார் தெய்வமானது இந்நாவலில் இடம்பெறும் சிறுதெய்வ வழிபாட்டு மரபிற்கு சான்றாகிறது.*

**உணவு**

*மனிதனின் அடிப்படைத் தேவைகளுள் ஒன்று உணவு. அந்தந்த பகுதிகளில் பயிரிடப்படும் அல்லது கிடைக்கும் உணவுகளை மனிதன் உண்டு வாழ்ந்து வந்தான். அவ்வகையில் மருத நிலத்திற்குரிய முதன்மை உணவாக நெல்லினாலான அரிசி சோறு உள்ளது. “மூணாவது வீடு தேவகியுடையது. அரக்கப்பரக்க சோத்துக்குவளையையும் சாம்பார், ரச வாளிகளையும் வெளியே எடுத்து வைத்துக் கொண்டிருந்தால் தேவகி.” (கண்மணி குணசேகரன், 2016, ப.எ.84) வேளாண் நிலங்களில் பணிசெய்ய செல்லும் பெண்களின் பேச்சுகளினூடே அவர்களின் உணவுமுறை அறியப்படுகிறது.*

**தொழில்**

*மருத நிலத்தின் அடிப்படைத் தொழில் உழவுத்தொழிலாக அமைந்துள்ளது. வயல்களில் விளையும் நெற்கதிர்களை அறுவடை செய்வது வாழும் மருத நிலம் செல்வ வளம் மிக்கதாகக் கொள்ளப்படுகிறது. இந்நாவலிலும் மக்கள் வேளாண்மைத் தொழிலின் போது கொண்டிருந்த வாழ்க்கை நிலையையும், வேளாண் நிலங்களை அரசு கையகப்படுத்திய பிறகு அடைந்த வாழ்வாதார மாற்றங்களையும் ஆசிரியர் வேறுபடுத்திக் காட்டியுள்ளார்.*

**“இவளே தாமதம். இதில் கூலிக்கு அறுக்க வருபவளையும் தாமதமாகக் கூப்பிட்டுக் கொண்டு போனால், அப்பா முகத்தை ஏறெடுத்துப் பார்க்க முடியாது. எள்ளும் கொள்ளும் பொரியும்.”**

***(கண்மணி குணசேகரன், 2016, ப.எ.84)***

*“ஓர் ரூவா... ஓர் ரூவா.... வெள்ரி பிஞ்சி ஓர் ரூவா...மந்தாரக் குப்பத்தில் பேருந்து வந்து சுழன்று நிற்பதற்குள் நெருங்குகிற குரல்கள். இறங்கிக் கொண்டிருந்த பாஞ் சாலை, ராசோக்கியத்திற்கும் அதில் ஒரு குரல் மட்டும் பரிச்சியப்பட்டதாகக் கேட்கவும் திரும்பினார்கள். திகைத்துப்போய்விட்டனர். கைகளில் வெள்ளரிப் பிஞ்சுகளை ஏந்திக் கொண்டு பேருந்து சன்னல்களின் முகங்களை ஏக்கமாகப் பார்த்தபடி முத்துக்*

*கண்ணு ஆயி" (கண்மணி குணசேகரன், 2016, ப.எ.641) என்பன நிலம் அரசாங்கத்தால் கையகப் படுத்தப்பட்ட பிறகு வாழ்வாதார மாற்றங்களை எதிர்கொண்ட மக்கள் அடைந்த மாறுதல்களை விளக்குகின்றன.*

**பூ**

*மருத நிலத்தின் புக்களாக தாமரையும் கழுநீர்பூவும்அடையாளப்படுத்தப்பட்டுள்ளன. "நேத்து குளிக்கப் போறன்னு போயி சித்தர ஏரியில ஒரு மடி செந்தாமரப் பூவ பறிச்சிக்கிட்டு வந்துருக்குதுவோ. பூவு குத்துவ எடுத்த அரச குழியான் வந்து பஞ்சாயத்தம் வைச்சிட்டுப் போறான்" (கண்மணி குணசேகரன், 2016, ப.எ.439) ஏரியில் குளிக்கச் சென்ற பூமாவும் மலரும் செந்தாமரைப் புவை பறித்து வந்த செய்தி மருத நிலப் பூக்களை வெளிப்படுத்துகிறது.*

**நீர்**

*வேளாண் தொழிலின் அடிப்படை நீர் ஆதாரம் ஆகும். "சித்திரை ஏரியில் வண்டி வண்டியாகத் தண்ணீரை மொண்டு கொண்டிருந்தார்கள். ஊரில் எல்லோருமே பனியால் மட்டுமல்ல பூச்சியாலும் பூக்கள் உதிர்வதாக நினைத்துக் கொண்டு," (கண்மணி குணசேகரன், 2016, ப.எ.464) மழைப் பொழிவு இல்லாத காலங்களில் நீரை குளம், ஏரி போன்றவற்றில் நீரைச் சேமித்து வைத்து பயன்படுத்தும் வழக்கமும் காணலாகிறது.*

**உரிப்பொருள்**

*ஐவகை திணைகளின் உரிப்பொருள்களாக நிலத்தில் நடைபெறும் நிமித்தங்களை,*

> ***"புணர்தல் பிரிதல் இருத்தல் இரங்கல்***
> ***ஊடல் அவற்றின் நிமித்தம் என்றுஇவை***
> ***தேருங் காலை திணைக்குஉரிப் பொருளே"***
>
> ***(தொல்.பொருள்.அகம் - 16)***

*புணர்தலும் புணர்தல் நிமித்தமும் - குறிஞ்சி, இருத்தலும் இருத்தல் நிமித்தமும் - முல்லை, ஊடலும் ஊடல் நிமித்தமும் - மருதம், இரங்கலும் இரங்கல் நிமித்தமும் - நெய்தல், பிரிதலும் பிரிதல் நிமித்தமும் - பாலை என ஐவகை நிலத்திற்குரிய உரிப்பொருள்களை தொல்காப்பியர் விவரித்துள்ளார்.*

*மருதநிலத் தலைவன் தலைவியை விட்டு பரத்தையரிடம் பிரிந்து சென்றதனால் தலைவி ஊடல் கொள்வதாக இந்நிலத்தின் உரிப்பொருள் அமைகிறது. இந்நாவலிலும் பாஞ்சாலையின் அண்ணன் சின்னத்தம்பி மனைவி தங்கப்பழத்தை விட்டுப் பிரிந்து வேறொரு மகளிருடன் குடும்ப வாழ்வை மேற்கொண்டதும் குறிப்பிடப்பட்டுள்ளது.*

> ***"நேத்து எங்க கூடத்தான் வேலைக்கி வந்தாரு, பாத்தன். இங்க வல்லன்னா, அப்ப அங்கதாம் போயிருப்பாரு."***
>
> ***(கண்மணி குணசேகரன், 2016, ப.எ.492)***

*செல்வம் நிறைந்த தலைவன் பரத்தைமை உறவு கொண்டிருந்தான் என்ற செய்தி சங்க இலக்கியம் மூலம் அறியலாகிறது. அதுபோலவே சுரங்கப் பணிக்கு ஆரம்பத்திலிருந்தே சென்று ஒப்பந்த பணியிலிருந்து நிரந்தரமான பணியிட வாய்ப்பைப் பெற்ற சின்னத்தம்பி அதிக பண செல்வாக்குப் பெற்றிருந்தார். பணம் பரத்தமைக்கு வழிவகுக்கிறது.*

**புறத்திணை**

*தனிமனிதனின் களவு, கற்பு வாழ்வை விளக்குவது அகத்திணை. அதேபோல் அவனது கொடை, வீரம், புகழ் போன்றவற்றை புறத்திணை ஆராய்கிறது. அவ்வகையில் ஒவ்வொரு அகத்திணைக்கும் முறையே புறத்திணைகளும் அமைகின்றன.*

> ***"உழிஞை தானே மருதத்துப் புறனே***
> ***முழுமுதல் அரணம் முற்றலும் கோடலும்***
> ***அனைநெறி மரபிற்று ஆகும் என்ப."***
>
> ***(தொல்.பொருள். புறம் - 66)***

*உழிஞை என்னும் புறத்திணை மருதத்திற்கு புறனாக அமைகிறது. கோட்டையினை பாதுகாக்கும் அரணாக விளங்குவது மதிலாகும். அம்மதிலை அழித்து பகைநாட்டை வெற்றி கொள்ள அரசன் வேட்கை கொள்வது உழிஞைத் திணை.*

*பெரும்பாலான போர் மண்ணாசை கொண்டே ஏற்படுகிறது. நிலங்களை*

ஆக்கிரமித்து தன்வசப்படுத்துவது மனிதனுக்கு பழக்கப்பட்ட ஒன்றாகவே காணப்படுகிறது. இந்நாவலிலும் ராசோக்கியமும் செங்கல்ராவும் அருகாமைத் தோட்டத்துக்காரர்களாக இருப்பதும் அவர்களது வரப்பு சண்டைகளும் காணப் படுகிறது.

**"வம்பா இது. ராசோக்கியம் மறிச்சி அது. கிழிச்சி வுட்டு வைச்சிருக்கான். அதப் போயி கையக் காட்ற..... திகிலுடன் சொன்னார் செங்கல்ராவு...**

**(கண்மணி குணசேகரன், 2016, ப.எ.20)**

இந்த குட்டப் பொறம்போக்க தெக்கு வடக்குல பாத்தா அவன் அனுபோகத்துல தெரியும். அதே மாதிரி கெழக்கு மேற்குல பாத்தா நம்ப அனுபோகத்துல வர்றமாதிரி இருக்கும். நம்ப மறிச்சி ஒட்டாதான் நிக்கிது. கழிச்சிதான வுட்ருக்கான். கெரையமா வாங்கிட்டான். சும்மா ரெண்டு கழிதான்." (கண்மணி குணசேகரன், 2016, ப.எ.27)

முற்காலத்தில் போரானது இருபெரும் வேந்தர்களுக்கிடையே அரசாட்சிக்காக நடந்தது. பின் அரசன் மக்களைத் தன் கட்டுப்பாட்டில் அடக்கிவைக்க முற்பட்டதன் விளைவாக அரசிற்கெதிராக மக்கள் போரிட்டக் காலச்சூழலும் காணப்பட்டது. தற்போதைய நிலையில் மக்கள் தமக்குள்ளாகவே மண்ணாசைக்காகவும், புகழுக்காகவும் சண்டையிட்டுக் கொள்ளும் சூழலும் காணப்படுகிறது. மருதத்திற்கு புறனான உழிஞை போரானது அரசின் மதிலை காக்கும் பொருட்டு ஏற்படுகிறது. அதுபோலவே வந்தாரங்குடி நாவலில் தனது வயலிற்கு அரணான வரப்பைக் கொண்டு பகைமைப் போக்கு ஏற்படுவதைக் காணமுடிகிறது.

## முடிவுகள்

- மனிதன் தான் வாழும் நிலப்பரப்பிற்கு ஏற்ப தன் வாழ்க்கை முறைகளை மாற்றியமைத்துக் கொண்டு வாழ்ந்துள்ளான் என்பதை தொல்காப்பியம் விளக்குகிறது.
- காவிரி நதி பாயும் நிலப்பகுதியை காவிரி நாடு, புனல் நாடு என்று அழைப்பது மரபு. அதுபோல கெடில நதி பாயும் பகுதி கெடிலநாடு என்று பெயர் பெற்றுள்ளது.
- தென்னார்க்காடு மாவட்டத்தில் உள்ள கள்ளக்குறிச்சி, திருக்கோவலூர், கடலூர், விருத்தாச்சலம் உள்ளிட்ட ஊர்களை உள்ளடக்கியப் பகுதியை நடுநாடு என்று வழங்குவர்.
- மனிதன் தொடர்ந்து ஒரு குறிப்பிட்ட நிலவெளியில் வாழும் போது அந்த வெளி சார்ந்த பழக்கங்கள் நடைமுறைகளும் உருவாகின்றன. அவையே தொடர்ந்து பின்னற்றப்படும் போது பண்பாட்டுக் கூறுகளாக உருக்கொள்கின்றன.
- முதல்பொருளுள் முக்கியமான நிலம் வந்தாரங்குடி நாவலின் மையமாக அமைகிறது.
- மருத நிலத்தின் சிறுபொழுதுகளாக வைகறையும் விடியலும், பெரும் பொழுதுகளாகக் கார், கூதிர், முன்பனி, பின்பனி, இளவேனில், முதுவேனில் ஆகிய ஆறும் குறிக்கப்படுகின்றன. கம்பு திணைகளில் வந்தமரும் குருவிகளை விரட்டுவது, கால்நடைகளுக்கு புல் அறுத்து தீனி போடுவது போன்ற பணிகள் விடியல் பொழுதிற்கான பணிகளாக அடையாளப்படுத்தப்பட்டுள்ளன.
- மருத நிலத் தெய்வமாக வேந்தன் குறிக்கப்பெறும் நிலையில் வந்தாரங்குடி முழுவதும் அவர்களது காவல் தெய்வம் அல்லது விருப்பமான தெய்வங்களை வணங்குவதைக் குறிப்பிட்டுள்ளார்.
- அந்தந்த பகுதிகளில் பயிரிடப்படும் அல்லது கிடைக்கும் உணவுகளை மனிதன் உண்டு வாழ்ந்து வந்தான். அவ்வகையில் மருத நிலத்திற்குரிய முதன்மை உணவாக நெல்லினாலான அரிசி சோறு உள்ளது.
- மருத நிலத்தின் அடிப்படைத் தொழில் உழவுத்தொழிலாக அமைந்துள்ளது. அது காலமாற்றத்திற்கு உட்படும்போது

எதிர்கொள்ளும் சிக்கல்கள் பிரச்சனைகள் பற்றி நாவல் ஆசிரியர் குறிப்பிட்டுள்ளார்.

- மருதத்திற்கு புறனான உழிஞை போரானது அரசின் மதிலை காக்கும் பொருட்டு ஏற்படுகிறது. அதுபோலவே வந்தாரங்குடி நாவலில் தனது வயலிற்கு அரணான வரப்பைக் கொண்டு பகைமைப் போக்கு ஏற்படுவதைக் காணமுடிகிறது.
- ஒரு மனிதனின் பாண்பாட்டுக் கூறுகள் அவன் வாழும் நிலப்பரப்பை அடிப்படையாகக் கொண்டே அமைகிறது. வாழ்வியல் முறைகள், சடங்குகள், நம்பிக்கைகள் போன்ற அனைத்தும் நிலத்தை அடிப்படையாகக் கொண்டே காணப்படுகிறது. தொல்காப்பியர் குறிப்பிட்ட நிலம் (திணை) சார்ந்த முதல், கரு, உரிப்பொருள் சார்ந்த பண்பாட்டுக் கூறுகள் பரிணாமத்தில் புதுமாற்றம் பெற்றாலும் தன் பழமை மரபு மாறாமல் தொடர்கிறது என்பது தெளிவாகிறது. கண்மணி குணசேகரன் எழுதிய வந்தாரங்குடி நாவல் மருதநிலம் சார்ந்த பழமை மரபை வெளிப்படுத்துகிறது என்ற ஆய்வுக்கருதுகோள் இக்கட்டுரை மூலம் நிறுவப்பட்டுள்ளது.

**பார்வை நூல்கள்**

1. அறவேந்தன்.இரா., (உ.ஆ), (2024), குறுந்தொகை உரை வேறுபாடு, நியு செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட், சென்னை.
2. கதிர்.முருகு., (உ.ஆ), (2019), சங்க இலக்கியம் பத்துப்பாட்டு மூலமும் உரையும், சாரதா பதிப்பகம், சென்னை.
3. கண்மணி. குணசேகரன்.அ (2016), வந்தாரங்குடி, தமிழினி வெளியீடு, சென்னை.
4. சுந்தர சண்முகனார். புலவர்., (2001), கெடிலக்கரை நாகரிகம், மெய்யப்பன் தமிழாய்வகம், சிதம்பரம்.
5. திருஞானசம்பந்தம்.ச., (உ.ஆ), (2020), தொல்காப்பியம் பொருளதிகாரம் மூலமும் உரையும், கதிர் பதிப்பகம், திருவையாறு.
6. பாலாஜி.க., (உ.ஆ), (2024), நற்றிணை உரை வேறுபாடு, நியு செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட், சென்னை.
7. பாலுச்சாமி.எ., (2011), மருதத்தில் மக்கள் வாழ்வியல், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை.
8. மாணிக்கவாசகன். ஞா., (உ.ஆ), (1998), புறநானூறு மூலமும் உரையும், உமா பதிப்பகம், சென்னை.
9. மீனாட்சிசுந்தரனார்.தெ.பொ.,(1980), தமிழும் பிற பண்பாடும், நியு செஞ்சுரி புக் ஹவுஸ் பிரைவேட் லிமிடெட், சென்னை.
10. வேங்கடசாமி நாட்டார்.ந.மு., (உ.ஆ), (1965), அகநானூறு ந.மு.வேங்கடசாமி நாட்டார் உரை, சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை.